# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

## மதிப்பீட்டு அறிக்கை

# 15 - கிறிஸ்தவம்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

# மதிப்பீட்டு அறிக்கை

## 15 - கிறிஸ்தவம்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**கிறிஸ்தவம்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# அறிமுகம்

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளில் அதிக அளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்கே தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடைபெறும் இப்பரீட்சைப் பெறுபேறுகளினால் பெறப்படும் சான்றிதழ் உயர்கல்விக்கான தகுதியைப் பெறுவதற்கு மட்டுமன்றி நடுத்தர மட்டத்தில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்கலைக்கழகங்களின் சில கற்கைநெறிகளைப் பயிலுவதற்கான அடிப்படைத் தகைமையை அளவிடும் அளவுகோலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்பகம், தகுதி ஆகியவற்றுடன் உயர்தரமும் காரணங்களாகும்.

இப்பரீட்சையில் உயர் அடைவினைப் பெறுவதற்காக மாணவர்களும், அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிக முயற்சியை மேற்கொள்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் அதற்கு உதவும் முகமாகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்கான கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் பயனுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை நூலகத்தில் பேணுதல் மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I இல், வினாப்பத்திரம் ரீதியாக பாட இலக்குகள், பாட அடைவு பற்றிய தகவல்கள், மாவட்டம், கல்வி வலயம் என்பவற்றிற்கேற்பத் தரப்பட்டுள்ளன. பகுதி II இல், முதலாம் இரண்டாம் வினாப்பத்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் விடைகள் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் வழிகாட்டல்களும் அடங்கியுள்ளன. பகுதி III இல் விடை எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களும் கற்றல் - கற்பித்தல் பணி பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகளும் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய முறைகள் பற்றியும் உங்களுக்கு துணைபுரியக் கூடிய அம்சங்களும் தரப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பண்புத்தர விருத்திக்காகப் பயனுள்ள கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரதான பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்களுக்கும் இச்செயற்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2012 ஜனுவரி 20
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. டப்ளியு.எம்.என்.ஜே. புஸ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திருமதி. மை. ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர்<br><br>திரு. டப்.வீ.டி.எஸ்.எம். வரகாகொட<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திருமதி. எம். ஆர். எஸ். வாஸ்<br>இலங்கை ஆசிரியர் சேவை<br>சென். தோமஸ் கல்லூரி<br>கல்கிசை<br><br>திருமதி. ஏ.ஐ.பீ. ஜயதுங்க<br>ஆசிரியர் சேவை<br>பிஷொப் கல்லூரி<br>கொழும்பு - 03<br><br>திருமதி. குளோரி ஹெப்சிபா<br>ஆசிரியர் சேவை<br>மஹ/ கம்பளை இந்து வித்தியாலயம்<br>கம்பளை |
| கணனி பக்க வடிவமைப்பு | - | திரு. பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி. றஹீனா ஹாசிம்<br>கணனி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I — **பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளித்தமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 11

2.1.2 வினாப்பத்திரம் I 12

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 16

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 17

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 18

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 19

**பகுதி** III

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 28

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 29

# பகுதி I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ✶ படைப்பின் உன்னத படைப்பான மனிதன் தன் படைப்பாளரை அறிந்து கொள்வதற்கு ஊக்குவித்தல்.
- ✶ கிறிஸ்துவானவரின் பணியும் அவரின் உயிர்ப்பின் அனுபவத்தையும் ஏற்று நேரத்தியான கிறிஸ்தவ வாழ்வை வாழ வழிவகுத்தல்
- ✶ இறைவர்த்தையின் மூலம் போஷிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வை சமுதாயத்தில் சான்றுபகர்வதற்கு முன்வருதல்.
- ✶ கிறிஸ்துவின் எல்லையில்லா அன்பை விருத்தி செய்து அவ்வன்பை சமுதாயத்தில் நிலைநாட்ட ஊக்குவித்தல்.
- ✶ தன்னைச் சூழ உள்ள இயற்கைச் சூழலைக் கடவுளின் கொடை எனக் கருதி அதனைப் பாதுகாத்து விருத்தி செய்வதற்கான படிமுறைகளை மேற்கொள்வதற்குத் தூண்டுதல்.
- ✶ பெறுமதியான மனிதாபிமானங்களை கட்டியெழுப்புவதோடு கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்குள் இணைந்த சமுதாயத்தை உருவாக்குவதில் பங்கேற்றல்.
- ✶ இலங்கைக் கலாசாரத்தை மதித்து அக்கலாசாரத்தின் பெறுமானங்கள் மூலம் ஜெபங்கள் தியானங்கள் என்பவற்றைச் சேர்த்துக் கொண்டு வழிபாடுகளை ஒழுங்கு செய்து அர்த்தமுள்ள வழிபாடாக நடத்துவதற்கு வழிவகுத்தல்.
- ✶ தேசிய ரீதியானதும் சமயங்களுக்கிடையிலானதுமான நட்புறவை வளர்ப்பதற்காக, நீடித்து நிலைக்கக்கூடிய மனிதத் தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் தேவஅருளைப் புவியில் விரிவாக்குவதற்கான பங்களிப்பிற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- ✶ வாழ்க்கையும் மறைக்கல்வி கற்பதும் இரண்டல்ல, ஒரே செயல் என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.
- ✶ கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாத்து அனைத்து மதங்களையம் மதிப்பதற்கு வழிவகுத்தல்.

1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 1,223 | 77 | 1.267 |
| தமிழ் | 1,903 | 243 | 2.14 |
| ஆங்கிலம் | 69 | 150 | 219 |
| மொத்தம் | **3,195** | **437** | **3632** |

அட்டவணை 1

1.2.2 தரங்கள் பெறப்பட்ட விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 557 | 17.43 | 42 | 9.62 | 599 | 16.49 |
| B | 563 | 17.62 | 52 | 11.90 | 615 | 16.93 |
| C | 857 | 26.82 | 133 | 30.43 | 990 | 27.26 |
| S | 760 | 23.79 | 134 | 30.66 | 894 | 24.61 |
| W | 458 | 14.33 | 76 | 17.39 | 534 | 14.70 |
| மொத்தம் | **3195** | **100** | **437** | **100** | **3632** | **99.99** |

அட்டவணை 2

### 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 774 | 216 | 27.91 | 136 | 17.57 | 161 | 20.80 | 153 | 19.77 | 666 | 86.05 | 108 | 13.95 |
| 2. கம்பஹா | 284 | 31 | 10.92 | 40 | 14.08 | 72 | 25.35 | 84 | 29.58 | 227 | 79.93 | 57 | 20.07 |
| 3. களுத்துறை | 35 | 2 | 5.71 | 6 | 17.14 | 12 | 34.29 | 9 | 25.71 | 29 | 82.86 | 6 | 17.14 |
| 4. கண்டி | 170 | 30 | 17.65 | 33 | 19.41 | 51 | 30.00 | 36 | 21.18 | 150 | 88.24 | 20 | 11.76 |
| 5. மாத்தளை | 11 | 1 | 9.09 | 1 | 9.09 | 5 | 45.45 | 2 | 18.18 | 9 | 81.82 | 2 | 18.18 |
| 6. நுவரெலியா | 171 | 14 | 8.19 | 33 | 19.30 | 68 | 39.77 | 41 | 23.98 | 156 | 91.23 | 15 | 8.77 |
| 7. காலி | 24 | 5 | 20.83 | 4 | 16.67 | 6 | 25.00 | 4 | 16.67 | 19 | 79.17 | 5 | 20.83 |
| 8. மாத்தறை | 14 | 2 | 14.29 | 2 | 14.29 | 2 | 14.29 | 5 | 35.71 | 11 | 78.57 | 3 | 21.43 |
| 9. அம்பாந்தோட்டை | 6 | 2 | 33.33 | 0 | 0.00 | 1 | 16.67 | 0 | 0.00 | 3 | 50.00 | 3 | 50.00 |
| 10. யாழ்ப்பாணம் | 294 | 66 | 22.45 | 57 | 19.39 | 68 | 23.13 | 57 | 19.39 | 248 | 84.35 | 46 | 15.65 |
| 11. கிளிநொச்சி | 106 | 3 | 2.83 | 15 | 14.15 | 18 | 16.98 | 38 | 35.85 | 74 | 69.81 | 32 | 30.19 |
| 12. மன்னார் | 59 | 18 | 30.51 | 17 | 28.81 | 14 | 23.73 | 8 | 13.56 | 57 | 96.61 | 2 | 3.39 |
| 13. வவுனியா | 99 | 28 | 28.28 | 23 | 23.23 | 32 | 32.32 | 13 | 13.13 | 96 | 96.97 | 3 | 3.03 |
| 14. முல்லைத்தீவு | 51 | 3 | 5.88 | 5 | 9.80 | 13 | 25.49 | 18 | 35.29 | 39 | 76.47 | 12 | 23.53 |
| 15. மட்டக்களப்பு | 297 | 61 | 20.54 | 57 | 19.19 | 89 | 29.97 | 62 | 20.88 | 269 | 90.57 | 28 | 9.43 |
| 16. அம்பாறை | 89 | 21 | 23.60 | 26 | 29.21 | 20 | 22.47 | 16 | 17.98 | 83 | 93.26 | 6 | 6.74 |
| 17. திருகோணமலை | 100 | 18 | 18.00 | 28 | 28.00 | 25 | 25.00 | 22 | 22.00 | 93 | 93.00 | 7 | 7.00 |
| 18. குருநாகல் | 65 | 8 | 12.31 | 10 | 15.38 | 16 | 24.62 | 21 | 32.31 | 55 | 84.62 | 10 | 15.38 |
| 19. புத்தளம் | 12 | 1 | 8.33 | 2 | 16.67 | 3 | 25.00 | 5 | 41.67 | 11 | 91.67 | 1 | 8.33 |
| 20. அனுராதபுரம் | 11 | 0 | 0.00 | 2 | 18.18 | 4 | 36.36 | 0 | 0.00 | 6 | 54.55 | 5 | 45.45 |
| 21. பொலன்னறுவை | 4 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 50.00 | 0 | 0.00 | 2 | 50.00 | 2 | 50.00 |
| 22. பதுளை | 67 | 5 | 7.46 | 6 | 8.96 | 20 | 29.85 | 24 | 35.82 | 55 | 82.09 | 12 | 17.91 |
| 23. மொனராகலை | 6 | 0 | 0.00 | 0 | 0.00 | 3 | 50.00 | 1 | 16.67 | 4 | 66.67 | 2 | 33.33 |
| 24. இரத்தினபுரி | 44 | 2 | 4.55 | 5 | 11.36 | 16 | 36.36 | 11 | 25.00 | 34 | 77.27 | 10 | 22.73 |
| 25. கேகாலை | 47 | 5 | 10.64 | 8 | 17.02 | 14 | 29.79 | 8 | 17.02 | 35 | 74.47 | 12 | 25.53 |
| **மொத்தம்** | **2840** | **542** | **19.08** | **516** | **18.17** | **735** | **25.88** | **638** | **22.46** | **2431** | **85.60** | **409** | **14.40** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 499 | 170 | 34.07 | 92 | 18.44 | 90 | 18.04 | 91 | 18.24 | 443 | 88.78 | 56 | 11.22 |
| 2. ஹோமாகம | 25 | 4 | 16.00 | 3 | 12.00 | 7 | 28.00 | 7 | 28.00 | 21 | 84.00 | 4 | 16.00 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 21 | 1 | 4.76 | 0 | 0.00 | 3 | 14.29 | 9 | 42.86 | 13 | 61.90 | 8 | 38.10 |
| 4. பிலியந்தல | 229 | 41 | 17.90 | 41 | 17.90 | 61 | 26.64 | 46 | 20.09 | 189 | 82.53 | 40 | 17.47 |
| 5. கம்பஹா | 11 | 0 | 0.00 | 0 | 0.00 | 5 | 45.45 | 5 | 45.45 | 10 | 90.91 | 1 | 9.09 |
| 6 மினுவாங்கொட | 12 | 0 | 0.00 | 3 | 25.00 | 2 | 16.67 | 3 | 25.00 | 8 | 66.67 | 4 | 33.33 |
| 7. நீர்கொழும்பு | 226 | 30 | 13.27 | 33 | 14.60 | 54 | 23.89 | 65 | 28.76 | 182 | 80.53 | 44 | 19.47 |
| 8. களனி | 35 | 1 | 2.86 | 4 | 11.43 | 11 | 31.43 | 11 | 31.43 | 27 | 77.14 | 8 | 22.86 |
| 9. களுத்துறை | 13 | 2 | 15.38 | 2 | 15.38 | 3 | 23.08 | 3 | 23.08 | 10 | 76.92 | 3 | 23.08 |
| 10. மத்துகம | 4 | 0 | 0.00 | 0 | 0.00 | 3 | 75.00 | 1 | 25.00 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 11. ஹொரணை | 18 | 0 | 0.00 | 4 | 22.22 | 6 | 33.33 | 5 | 27.78 | 15 | 83.33 | 3 | 16.67 |
| 12. கண்டி | 123 | 26 | 21.14 | 27 | 21.95 | 36 | 29.27 | 22 | 17.89 | 111 | 90.24 | 12 | 9.76 |
| 13. தெனுவர | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 14. கம்பளை | 30 | 3 | 10.00 | 3 | 10.00 | 9 | 30.00 | 9 | 30.00 | 24 | 80.00 | 6 | 20.00 |
| 15. தெல்தெனியா | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 16. வத்தேகம | 13 | 1 | 7.69 | 3 | 23.08 | 6 | 46.15 | 3 | 23.08 | 13 | 100.00 | 0 | 0.00 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 33.33 | 1 | 33.33 | 2 | 66.67 |
| 18. மாத்தளை | 11 | 1 | 9.09 | 1 | 9.09 | 5 | 45.45 | 2 | 18.18 | 9 | 81.82 | 2 | 18.18 |
| 19. கலேவெவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 20. நாஉல | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 21. வில்கமுவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 22. நுவரெலியா | 46 | 2 | 4.35 | 6 | 13.04 | 22 | 47.83 | 10 | 21.74 | 40 | 86.96 | 6 | 13.04 |
| 23. கொத்மலை | 20 | 0 | 0.00 | 5 | 25.00 | 7 | 35.00 | 6 | 30.00 | 18 | 90.00 | 2 | 10.00 |
| 24. ஹட்டன் | 91 | 10 | 10.99 | 19 | 20.88 | 33 | 36.26 | 23 | 25.27 | 85 | 93.41 | 6 | 6.59 |
| 25. வலப்பனை | 13 | 2 | 15.38 | 2 | 15.38 | 6 | 46.15 | 2 | 15.38 | 12 | 92.31 | 1 | 7.69 |
| 26. ஹங்குரன்கெத்த | 1 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 27. காலி | 20 | 5 | 25.00 | 4 | 20.00 | 5 | 25.00 | 3 | 15.00 | 17 | 85.00 | 3 | 15.00 |
| 28. எல்பிட்டிய | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 | 2 | 100.00 | 0 | 0.00 |
| 29. அம்பலாங்கொடை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 30. உடுகம | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 100.00 |
| 31. மாத்தறை | 7 | 2 | 28.57 | 1 | 14.29 | 1 | 14.29 | 1 | 14.29 | 5 | 71.43 | 2 | 28.57 |
| 32. அக்குரஸ்ஸ | 2 | 0 | 0.00 | 1 | 50.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 |
| 33. முலடியன-ஹக்மன | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 34. மொறவக்க | 4 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 25.00 | 3 | 75.00 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 35. தங்காலை | 3 | 2 | 66.67 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 33.33 | 0 | 0.00 | 1 | 33.33 | 2 | 66.67 |
| 37. வலஸ்முல்லை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 38. யாழ்ப்பாணம் | 127 | 34 | 26.77 | 28 | 22.05 | 32 | 25.20 | 19 | 14.96 | 113 | 88.98 | 14 | 11.02 |
| 39. தீவகம் | 8 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 12.50 | 3 | 37.50 | 4 | 50.00 | 4 | 50.00 |
| 40. தென்மராட்சி | 20 | 2 | 10.00 | 2 | 10.00 | 4 | 20.00 | 7 | 35.00 | 15 | 75.00 | 5 | 25.00 |
| 41. வலிகாமம் | 128 | 27 | 21.09 | 25 | 19.53 | 31 | 24.22 | 25 | 19.53 | 108 | 84.38 | 20 | 15.63 |
| 42. வடமராட்சி | 11 | 3 | 27.27 | 2 | 18.18 | 0 | 0.00 | 3 | 27.27 | 8 | 72.73 | 3 | 27.27 |
| 43. கிளிநொச்சி | 106 | 3 | 2.83 | 15 | 14.15 | 18 | 16.98 | 38 | 35.85 | 74 | 69.81 | 32 | 30.19 |
| 44. மன்னார் | 49 | 15 | 30.61 | 17 | 34.69 | 12 | 24.49 | 4 | 8.16 | 48 | 97.96 | 1 | 2.04 |
| 45. மடு | 10 | 3 | 30.00 | 0 | 0.00 | 2 | 20.00 | 4 | 40.00 | 9 | 90.00 | 1 | 10.00 |
| 46. வவுனியா - தெற்கு | 95 | 28 | 29.47 | 22 | 23.16 | 31 | 32.63 | 12 | 12.63 | 93 | 97.89 | 2 | 2.11 |
| 47. வவுனியா - வடக்கு | 4 | 0 | 0.00 | 1 | 25.00 | 1 | 25.00 | 1 | 25.00 | 3 | 75.00 | 1 | 25.00 |
| 48. முல்லைத்தீவு | 28 | 3 | 10.71 | 3 | 10.71 | 10 | 35.71 | 7 | 25.00 | 23 | 82.14 | 5 | 17.86 |
| 49. துணுக்காய் | 23 | 0 | 0.00 | 2 | 8.70 | 3 | 13.04 | 11 | 47.83 | 16 | 69.57 | 7 | 30.43 |
| 50. மட்டக்களப்பு | 175 | 37 | 21.14 | 36 | 20.57 | 52 | 29.71 | 35 | 20.00 | 160 | 91.43 | 15 | 8.57 |
| 51. கல்குடா | 94 | 15 | 15.96 | 16 | 17.02 | 30 | 31.91 | 22 | 23.40 | 83 | 88.30 | 11 | 11.70 |
| 52. பட்டிருப்பு | 28 | 9 | 32.14 | 5 | 17.86 | 7 | 25.00 | 5 | 17.86 | 26 | 92.86 | 2 | 7.14 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 54. அம்பாறை | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 100.00 |
| 55. கல்முனை | 49 | 14 | 28.57 | 15 | 30.61 | 9 | 18.37 | 8 | 16.33 | 46 | 93.88 | 3 | 6.12 |
| 56. சம்மாந்துறை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 57. மஹாஓய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 58. தெஹியத்தகண்டிய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 59. அக்கரைப்பற்று | 38 | 7 | 18.42 | 11 | 28.95 | 11 | 28.95 | 8 | 21.05 | 37 | 97.37 | 1 | 2.63 |
| 60. திருகோணமலை | 80 | 17 | 21.25 | 25 | 31.25 | 18 | 22.50 | 18 | 22.50 | 78 | 97.50 | 2 | 2.50 |
| 61. மூதூர் | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 |
| 62. கந்தளாய் | 3 | 1 | 33.33 | 1 | 33.33 | 1 | 33.33 | 0 | 0.00 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 63. கிண்ணியா | 14 | 0 | 0.00 | 2 | 14.29 | 4 | 28.57 | 4 | 28.57 | 10 | 71.43 | 4 | 28.57 |
| 64. குருநாகல் | 61 | 8 | 13.11 | 10 | 16.39 | 14 | 22.95 | 19 | 31.15 | 51 | 83.61 | 10 | 16.39 |
| 65. குளியாப்பிட்டிய | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 | 2 | 100.00 | 0 | 0.00 |
| 66 நிக்கவெரட்டிய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 67. மாகோ | 2 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 50.00 | 1 | 50.00 | 2 | 100.00 | 0 | 0.00 |
| 68. கிரியுள்ள | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 69. இப்பாகமுவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 70. புத்தளம் | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 71. சிலாபம் | 12 | 1 | 8.33 | 2 | 16.67 | 3 | 25.00 | 5 | 41.67 | 11 | 91.67 | 1 | 8.33 |
| 72. அனுராதபுரம் | 7 | 0 | 0.00 | 2 | 28.57 | 2 | 28.57 | 0 | 0.00 | 4 | 57.14 | 3 | 42.86 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 71. தபுத்தேகம | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 72. கெக்கிராவ | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 |
| 73. கலென்பின்துனுவெவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 74. கெபித்திகொல்லாவ | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 |
| 75. பொலன்னறுவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 76. ஹிங்குரக் கொடை | 4 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 50.00 | 0 | 0.00 | 2 | 50.00 | 2 | 50.00 |
| 77. திம்புலாகல | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 78. பதுளை | 19 | 0 | 0.00 | 3 | 15.79 | 5 | 26.32 | 7 | 36.84 | 15 | 78.95 | 4 | 21.05 |
| 79. பண்டாரவளை | 18 | 2 | 11.11 | 2 | 11.11 | 7 | 38.89 | 5 | 27.78 | 16 | 88.89 | 2 | 11.11 |
| 80. மஹியங்கனை | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 81. வெளிமடை | 19 | 3 | 15.79 | 1 | 5.26 | 4 | 21.05 | 6 | 31.58 | 14 | 73.68 | 5 | 26.32 |
| 82. பசறை | 10 | 0 | 0.00 | 0 | 0.00 | 3 | 30.00 | 6 | 60.00 | 9 | 90.00 | 1 | 10.00 |
| 83. மொனராகலை | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 84. வெல்லவாய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 85. பிபிலை | 3 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 33.33 | 0 | 0.00 | 1 | 33.33 | 2 | 66.67 |
| 86. இரத்தினபுரி | 8 | 1 | 12.50 | 1 | 12.50 | 2 | 25.00 | 1 | 12.50 | 5 | 62.50 | 3 | 37.50 |
| 87. பலாங்கொடை | 17 | 1 | 5.88 | 1 | 5.88 | 7 | 41.18 | 5 | 29.41 | 14 | 82.35 | 3 | 17.65 |
| 88. நிவித்திகல | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 89. எம்பிலிபிடிய | 18 | 0 | 0.00 | 3 | 16.67 | 6 | 33.33 | 5 | 27.78 | 14 | 77.78 | 4 | 22.22 |
| 90. கேகாலை | 19 | 3 | 15.79 | 1 | 5.26 | 7 | 36.84 | 2 | 10.53 | 13 | 68.42 | 6 | 31.58 |
| 91. மாவனல்லை | 13 | 2 | 15.38 | 4 | 30.77 | 2 | 15.38 | 3 | 23.08 | 11 | 84.62 | 2 | 15.38 |
| 92. தெஹிஓவிட்ட | 15 | 0 | 0.00 | 3 | 20.00 | 5 | 33.33 | 3 | 20.00 | 11 | 73.33 | 4 | 26.67 |
| **மொத்தம்** | **2840** | **542** | **19.08** | **516** | **18.17** | **735** | **25.88** | **638** | **22.46** | **2431** | **85.60** | **409** | **14.40** |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 9 | 0.25 | 3632 | 100.00 |
| 81 - 90 | 137 | 3.77 | 3623 | 99.75 |
| 71 - 80 | 454 | 12.50 | 3486 | 95.98 |
| 61 - 70 | 618 | 17.02 | 3032 | 83.48 |
| 51 - 60 | 659 | 18.14 | 2414 | 66.46 |
| 41 - 50 | 647 | 17.81 | 1755 | 48.32 |
| 31 - 40 | 585 | 16.11 | 1108 | 30.51 |
| 21 - 30 | 326 | 8.98 | 523 | 14.40 |
| 11 - 20 | 182 | 5.01 | 197 | 5.42 |
| 01 - 10 | 15 | 0.41 | 15 | 0.41 |
| 00 - 00 | 0 | 0.00 | 0 | 0.00 |


**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.
உதாரணம் (31 - 40 க்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.).

புள்ளிகளின் வீச்சினைக் கொள்ளும்போது, 31-40 க்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 585 ஆகும். அதன் சதவீதமானது 16.11% சதவீதம் ஆகும். 40 புள்ளிக்கு குறைவாக எடுத்த மாணவர்கள் 1108 ஆகும். இதன் சதவீதம் 30.51% ஆகும்.

## 1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு





**வரைபு** 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம்: மேலே தரப்பட்ட வரைபின்படி 3ஆம் வினாவிற்குச் சரியான விடையளித்தோர் 84% ஆகும். மேலும் இதன்படி கூடிய பரீட்சார்த்திகள் விடையளிக்கக் கூடிய வினாவாக 25 ஆம் வினாகாணப்பட்டது. அத்தோடு குறைந்த விடையளித்த வினாவாக 19ஆம் வினா காணப்பட்டது. இதன்படி கூடிய அளவில் 94.7% மும் குறைந்த அளவில் 10.7% காணப்படுகிறது.

### 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.





இது RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - வரைபின்படி வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தோரில் 79.35% த்தினர் 4ஆம் வினாவைத் தெரிவு செய்திருந்தனர். 3ஆம் வினாவைத் தெரிவு செய்தவர்கள் மிகக் குறைந்தளவான 32.9% த்தினர் ஆகும். 1ஆம் வினா கட்டாய வினாவாக இருந்தபோதிலும் விடையளிக்காதவர்கள் 2.58% மாகும்.

**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

### 1.3. 3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு வரைபு 3 தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம்:-

1ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளி வீச்சு 00-25% இற்கிடையில் (0-5புள்ளிகள்) 22%த்தினரும், புள்ளி வீச்சு 26-50% இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 25%த்தினரும், புள்ளி வீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 40% த்தினரும், புள்ளி வீச்சு 76-100% இற்கிடையில் (16-20 புள்ளிகள்)13%த்தினரும் பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




வரைபு 4

இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் : 2ஆம் வினாவில் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் விடையளிக்கப்பட்ட சதவீதத்தின் முறையானது வினா (i) இற்கு 69% ஆனவர்களும் பிரிவு வினா (ii) இற்கு 65% ஆனவர்களும் பிரிவு வினா (iii) இற்கு 60% வீதமானவர்களும் விடையளித்துள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு வினாவின் பிரிவுகளுக்கும் சரியாக விடையளித்தோரின் சதவீதத்தை நோக்கும்போது அனைத்திலும் 4ஆம் வினாவானது மிகவும் கூடுதலான சதவீதத்தைக் காண்பிப்பதோடு 3ஆம் வினாவானது குறைந்த சதவீதத்தைக் காட்டுகின்றது.

## பகுதி II

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

## 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

**நேரம் : 01 மணித்தியாலம்**

40 பல்தேர்வு வினாக்கள் அடங்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

2.1.2. **வினாப்பத்திரம் I**

1. மரியாவைப் பற்றி விளக்கும் பின்வரும் வசனங்களில் நமது கிறிஸ்தவ வாழ்வுடன் நேரடித் தொடர்புடையது
   (1) ''பெண்களுக்குள் ஆசி பெற்றவர்.'' (2) ''அருள் மிகப் பெற்றவர்.''
   (3) ''நான் ஆண்டவரின் அடிமை'' (4) ''ஆண்டவரின் தாய்''

2. இன்றைய சமுதாயப் பிரச்சினைகளின் மத்தியில் எலிசபெத்துவினிடம் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்
   (1) தேவை ஏற்படும்போது குரல் எழுப்புதல்
   (2) இறைசித்தம் நிறைவேறும்வரை அமைதியைக் கடைப்பிடித்தல்
   (3) பிரச்சினைகளின் மத்தியில் மகிழ்வுடன் வாழுதல்
   (4) பிறரின் கருத்துகளைக் கவனியாது விடல்

3. தனிப்பட்ட செபத்திற்கும் தியானத்திற்கும் மிகச் சிறந்த இடமென ஆண்டவர் இயேசுவும் திருமுழுக்கு யோவனும் கருதியது
   (1) எருசலேம் தேவாலயம் (2) வனாந்தரம்
   (3) சிற்றாலயம் (4) கடற்கரை

4. நாசரேத்து ஊரில் இயேசுவானவர் அருளுரை ஆற்றியதைக் கேட்டவர்கள் அவரை யாரென இனங்கண்டனர் ?
   (1) கிறிஸ்து (2) யோசேப்பின் குமாரன்
   (3) ஒரு இறைவாக்கினர் (4) தாவீதின் குமாரன்

5. இயேசுவின் வாழ்வுப் பணியினைப் பற்றிய மெய்யான உட்கருத்தைச் சீடர்கள் உணர்வதற்கு உதவிய நிகழ்வு
   (1) தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (2) புயற்காற்றை அமர்த்துதல்
   (3) தோற்றம் மாறுதல் (4) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்

6. "நீங்கள் தாங்கமுடியாத சுமைகளை மக்கள் மேல் சுமத்துகிறீர்கள்" என்று இயேசுவால் குற்றம் சாட்டப்பட்டவர்கள்
   (1) உரோம அரசினர் (2) திருச்சட்ட அறிஞர்
   (3) ஏரோது அரசன் (4) சதுசேயர்

7. பன்னிரு வயது நிரம்பிய ஆண்டவர் எருசலேம் ஆலயத்தில் மேலும் தங்கியிருந்தமை
   (1) தன்பெற்றோரிடம் இருந்து விலகிச் செயற்படுவதற்காகும்.
   (2) தந்தையான கடவுளைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காகும்.
   (3) நாசரேத்து தொழுகைக் கூடத்தில் பெற்றுக்கொண்ட அறிவு குறைவுள்ளது என்பதாலாகும்.
   (4) ஒரு ரபியாக பயிற்றப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்பதாலாகும்.

8. ''கடவுளின் முன் நான் யார்'' என்ற கேள்வியைப் பற்றிச் சிந்திக்கவைக்கும் உவமை
   (1) நல்ல சமாரியன் பற்றிய உவமை
   (2) பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை
   (3) அறிவற்ற செல்வன் பற்றிய உவமை
   (4) நேர்மையற்ற நடுவரும் கைம்பெண்ணும் பற்றிய உவமை

9. லூக்காவின் நற்செய்தியில் பதியப்பட்டதன்படி இயேசுவானவர் ஒன்றும் கூறாது இருந்தமை
   (1) தலைமைக் குருக்கள் முன்னராகும். (2) யூதரின் தலைமைச் சங்கத்தின் முன்னராகும்.
   (3) ஆளுநர் பொந்தியு பிலாத்துவின் முன்னராகும். (4) ஏரோது அரசன் முன்னராகும்.

10. ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணிசெய்வாயாக'' என்று இயேசுவானவர் கூறியதனை கருத்திற் கொள்வதனால்
   (1) நாம் செல்வம் அதிகாரம் போன்றவற்றால் அடித்துச் செல்லாது தப்பிக்கொள்ளலாம்.
   (2) இன்று நாகரீகமானதாகக் கருதப்படுபவற்றில் சிக்கிக்கொள்ளாதிருக்கலாம்.
   (3) முறையற்ற முன்மாதிரி அளிப்போரிடம் இருந்து தப்பிக்கொள்ளலாம்.
   (4) தீமையின் வல்லமைக்கெதிராக முற்றிலுமாகச் செயற்படலாம்.

11. பன்னிரு சீடரை இயேசுவானவர் தெரிவு செய்யும்போது முக்கியமாகக் கருத்திற் கொண்டது அவர்களின்
   (1) விசேட தகைமைகள் பற்றியாகும். (2) பொருளாதாரநிலை பற்றியாகும்.
   (3) சமுதாயப் பின்னணி பற்றியாகும். (4) வாழ்வு பற்றிய இறைசித்தமாகும்.

12. இறையரசு பற்றி அழுது கொண்டிருப்போர் பெறும் பேறு
   (1) சிரித்து மகிழுதல் (2) வசதி நிறைந்த வாழ்வு
   (3) பட்டினியிலிருந்து நிறைவு பெறுதல் (4) அனைத்து நோய்களிலிருந்தும் சுகம் பெறுதல்

13. ஆண்டவர் இயேசு பெண்கள் பற்றி கொண்டிருந்த மனப்பாங்கின் மூலம் பெண்களுக்குத் தரும் சவால்/ அறைகூவல்
   (1) இறையரசுப் பணிகளில் ஈடுபடும்போது தாம் பெண்களென மறந்து செயற்படுதல் வேண்டும்.
   (2) இறையரசுப் பணிகளில் இறைவனின் பிள்ளைகளென உணர்ந்து முற்றிலும் பங்குகொள்ள வேண்டும்.
   (3) இறையரசுப் பணிகளில் ஈடுபடும்போது ஆண்களின் குணாதிசயங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
   (4) இறையரசிற்கென தாழ்வுடன் உழைக்கும் வேளையில் கிறிஸ்தவ ஆண் மக்களுக்கு உயர்ந்த இடமளித்தல் வேண்டும்.

14. இயேசுவின் செல்வாக்கின் நிமித்தம் சக்கேயு மேற்கொண்ட மிகச் சிறந்த தியாகச் செயல்
   (1) தன் தொழிலைவிட்டு இயேசுவைப் பின்பற்றியமை
   (2) இயேசுவின் வருகைக்காக தன் இல்லத்தை ஆயத்தப்படுத்தியமை
   (3) அநீதியாகச் சேர்த்த பணத்தைத் திருப்பிக் கொடுத்தமை
   (4) தனது சொத்தில் அரைப்பங்கை ஏழைகளுக்குக் கொடுத்தமை

15. இயேசு பரிசேயரைக் கண்டித்ததிலிருந்து நாம் கற்கும் முக்கிய பாடம்
   (1) பொது சுகாதாரம் பற்றிய அனைத்துச் சட்டங்களையும் கடைப்பிடித்தல் வேண்டும்.
   (2) தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோருக்குச் சிறந்த முன்மாதிரியாயிருத்தல் வேண்டும்.
   (3) மக்களின் தேவைகளைச் சந்தித்தல் சமய பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பதைவிட முக்கியமானதாகும்.
   (4) தனிச் செபம் பொது வழிபாட்டைவிட முக்கியமானதாகும்.

16. கிறிஸ்தவத் தலைமைத்துவத்துடன் முற்றிலும் ஒருங்கிணைந்து காணப்படும் பண்பு
   (1) நற்செய்தியை விளக்கிக் கூறுவதிலுள்ள திறமையாகும்.
   (2) சிறந்த இறையியல் கல்வியாகும்.
   (3) அனைவருக்கும் சேவை செய்ய விரும்புதலாகும்.
   (4) நற்செய்தியை திறமையாக வார்த்தைகளில் எடுத்துக்கூறத் தயங்காமையாகும்.

17. காணாமற்போன மகன் பற்றிய கதையின்படி ஒருவர் தன் பாவநிலையை உணரும்போது, அவர் தன்
   (1) ஆதரவற்ற நிலையை உணருகின்றார்.
   (2) அருகதையற்ற நிலையை உணர்கின்றார்.
   (3) அறியாமையை உணர்கின்றார்.
   (4) மடமைத்தனத்தை அறிகின்றார்.

18. ''என்பின்னே வா'' என்ற இயேசுவானவரின் அழைப்பிற்கு முறையாகச் செவிமடுப்பதற்குத் தடையாக இருப்பது
   (1) உலகத்தின் பொருட்கள் மீதுள்ள பற்றாகும்.
   (2) 'நான்' என்ற நிலையை விட்டுவிடுவதற்கு மெய்யான தீர்மானம் எடுக்காமையாகும்.
   (3) இயற்கை வளங்களை உரிய முறையில் பாவிக்க இயலாமையாகும்.
   (4) வருமானத்தில் தசம பாகத்தை வழங்குவதில் தயக்கம் கொள்வதாகும்.

19. 'கோழி தன் குஞ்சுகளைத் தன் இறைக்கைக்குள் சேர்ப்பதுபோல ...' இவ்வாறு கூறியதன் மூலம் இயேசுவானவர் தம் இரக்கத்தை எடுத்துரைப்பது
   (1) பாவிகளான பெண்கள் மீதாகும்.
   (2) பாவிகளான ஆண்கள் மீதாகும்.
   (3) பாவம் மிகு நகரத்தின் மீதாகும்.
   (4) பாவம் மிகு உலகத்தின் மீதாகும்.

20. இயேசுவானவரின் சிலுவை மரணம் அண்மித்து வந்த வேளையில் அவர் முன்கூறியவற்றில் நமக்கு முக்கியமாவது
   A - யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுப்பான் என்பதாகும்.
   B - எருசலேமும் அதன் தேவாலயமும் அழிந்து போகும் என்பதாகும்.
   C - உலகின் முடிவு பற்றி பல பிழையான கருத்துகள் கூறப்படும் என்பதாகும்.
   D - கிறிஸ்தவர்கள் துன்புறுவர் என்பதாகும்.
   இவ்வினாவிற்கான சரியான விடை அடங்குவது
   (1) A, B  (2) B, C  (3) C, D  (4) A, D

21. கெத்சமனேயில் இயேசுவானவர் ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றி பெற்றார் என்பதற்கான முக்கிய ஆதாரம்
   (1) தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாசை கருணையுடன் நோக்கியமை
   (2) தன்னைப் பிடிக்க வந்தவர்களுக்குத் தைரியத்துடன் முகங்கொடுத்தமை
   (3) சுயசித்தத்தை முற்றாக ஒறுத்து இறைசித்தத்திற்குக் கீழ்ப்படிந்தமை
   (4) மிகச் சிரமமான அவ்வேளையிலும் தம் சீடரைப் பற்றி கரிசனை கொண்டமை

22. பாவம் செய்யும் முன்பதாகவே அதற்கு மன்னிப்பு வழங்கியமையை மறைமுகமாகக் கூறும் இயேசுவானவரின் வார்த்தைகள்
   (1) ''நான் உன் நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்.''
   (2) ''நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து.''
   (3) ''உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.''
   (4) ''உனது நம்பிக்கை உன்னை நலமாக்கியது.''

23. இயேசுவைப் பற்றி தாம் கொண்டிருந்த கருத்துகள் மாறியுள்ளன என்று வார்த்தைகளின் மூலம் அறிவித்தவர்கள்
   (1) இயேசுவை எதிர்ப்பதற்காக ஒன்று சேர்ந்து செயற்பட்ட பரிசேயரும் சதுசேயரும் ஆவர்.
   (2) இயேசு நிரபராதி என்று உணர்ந்த பொந்தியு பிலாத்துவும் ஏரோது அரசனும் ஆவர்.
   (3) இயேசுவின் சிலுவை மரணத்தைக் கண்ட நூற்றுவர் தலைவரும் கள்வனும் ஆவர்.
   (4) இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கென ஒன்றிணைந்த பிரதான குருக்களும் யூதாசும் ஆவர்.

24. உயிர்த்தெழுந்த இயேசுவை அவரின் சீடர் இருவர் அடையாளம் கண்டு கொண்ட நிகழ்வு
   (1) அவரை அடக்கப் பண்ணப்பட்ட கல்லறையருகில் ஆகும்.
   (2) சீடர்கள் கூடியிருந்த மேலறையிலாகும்.
   (3) மீன்பிடிக்கச் சென்று திரும்பிய சில சீடர்களினாலாகும்.
   (4) எம்மாவூரில் தங்கியிருந்த இல்லத்திலாகும்.

25. ஆரம்ப காலத் திருச்சபையின் முன்மாதிரியின்படி
   (1) துன்புறுத்தப்படுவதில் இருந்து தப்பும்படி ஒளிந்து வாழ வேண்டும்.
   (2) தம் கிறிஸ்தவ அடையாளத்தைப் பாதுகாத்து துன்புறுத்தலைப் பயமின்றி நோக்க வேண்டும்.
   (3) துன்புறுத்துவோரைக் கடுமையாக விமர்சிக்க வேண்டும்.
   (4) துன்புறும் வேளைகளில் அனைத்துச் செயல்களில் இருந்தும் விலகியிருக்க வேண்டும்.

26. வனாந்தரத்தில்கூட ''நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்று இயேசுவானவர் கூறியமை
   (1) அவர்கள் சூழ்நிலைக்கேற்ப செயல்படுபவார்களா என்று அறிந்து கொள்வதற்காகும்.
   (2) தாம் செய்யவிருக்கும் அற்புதச் செயலில் மக்களின் பங்களிப்பைச் சேர்த்துக் கொள்வதற்காகும்.
   (3) கடவுளின் அளவற்ற கொடைகளில் மக்களின் நம்பிக்கையைப் பலப்படுத்துவதற்காகும்.
   (4) குறிப்பாக மக்களின் பசி தீர்க்கப்படுவதை உறுதி செய்வதற்காகும்.

27. பிள்ளைகளைப் பற்றி பின்வருமாறு இயேசுவானவர் குறிப்பிடும்போது, அவர் கடவுளின் பிள்ளையாகிய உமக்கு ஒரு சவாலை முன்வைக்கிறார். அதாவது
   (1) ''அவர்களைத் தடுக்காதீர்கள்''
   (2) ''சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்''
   (3) ''இறையாட்சி இத்தகையோருக்கே உரியது''
   (4) ''என் ஆடுகளை மேய்''

28. ஒரு சிறப்பான கிறிஸ்தவக் குடும்பத்தின் அதிமுக்கிய தன்மை
   (1) குடும்ப அங்கத்தவர்ளுக்கு இடையிலான அன்பும், பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளலுமாகும்.
   (2) பிள்ளைகளின் மீது பெற்றார் கொண்டிருக்கும் வன்மையான கட்டுப்பாடாகும்.
   (3) குடும்பமாகச் சேர்ந்து கூடிய பணம் சேர்க்க முற்படுதலாகும்.
   (4) இறைவார்த்தையை வாய்மொழியாக அறிவித்தலாகும்.

29. ''நான் நோயுற்றிருந்தேன்; என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை'' என்ற குற்றச்சாட்டிற்கு நாம் காட்ட வேண்டிய சிறந்த நடைமுறை சார்ந்த மாறுத்தரம் அளிப்பது
   (1) ''தினமும் நான் வைத்தியசாலை சென்று நோயுற்றவர்களை விசாரிப்பதாகும்.''
   (2) ''விபத்தில் சிக்கிய மனிதனை வாகனத்தில் ஏற்றிச் செல்லுதலாகும்.''
   (3) ''உதவி தேவைப்பட்ட ஒரு நோயாளிக்கு உடல் உளரீதியான உதவியை வழங்குதலாகும்.''
   (4) ''ஒரு வைத்தியசாலைக்கு வேண்டிய உதவியைச் செய்வேன் என்று அறிவிப்பதாகும்.''


30. இலங்கையராகிய நாம் கருத்தில் கொள்ள வேண்டிய சிறப்பான யூத பெறுமதி/ விழுமியம்
   A - சிறந்த விருந்தோம்பலைக் கைக்கொள்ளத் தூண்டுவதாகும்.
   B - பிற நாடுகள் மீது காட்டும் மதிப்பாகும்.
   C - வட்டியின்றி கடன் கொடுத்தல் ஆகும்.
   D - கூட்டுக்குடும்ப முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதாகும்.
   இவ்வினாவிற்கான சரியான விடை அடங்குவது
   (1) A, B (2) B, C (3) C, D (4) A, D

31. பல்லின பற்சமய சமுதாயத்தில் அமைதியான சகவாழ்வினை அனுபவிற்பதற்கு
   (1) பிறரிடமிருந்து நாம் தனித்து வாழ வேண்டும்.
   (2) சமுதாயப் பிரச்சினை பற்றி கரிசனை காட்டாதிருக்க வேண்டும்.
   (3) எமது பொது அபிலாசைகளையும் எதிர்நோக்கலையும் பலப்படுத்த வேண்டும்.
   (4) பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரே நோக்காயிருத்தல் வேண்டும்.

32. மக்கள் மத்தியில் இயேசுவின் பிரபல்யத்தைக் குறைக்கும் நோக்குடன் சதுசேயர் கேட்ட கேள்வி
   (1) ''திருமுழுக்கு கொடுக்கும் அதிகாரம் யோவானுக்கு விண்ணகத்திலிருந்து வந்ததா அல்லது மனிதரிடமிருந்து வந்ததா ?''
   (2) ''எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர் ?''
   (3) ''சீசருக்கு நாம் கப்பம் கட்டுவது முறையா இல்லையா ?''
   (4) ''வரப்போகிறவர் நீர் தானா ?''

33. இன்றைய நாட்களில் நடைபெறும் ஆச்சரிய மிக்க செயல்கள் மற்றும் அனுபவங்களில் இருந்து இறையாட்சியின் அடையாளங்களென நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியவை
   A - திரும்பவும் பார்வையளிக்கும் மிக நுணுக்கமான கண் சத்திர சிகிச்சை
   B - விண்வெளி பற்றி மனிதன் பெற்றுக் கொண்ட ஆழ்ந்த அறிவு
   C - உலகமயப்படுத்தப்படல் உலகெங்கும் பரந்துள்ளமை
   D - தென்ஆபிரிக்காவில் கறுப்பு வெள்ளை இன மக்களுக்கிடையேயான பிரச்சினை முடிவுற்றமை
   இவற்றுள் மிகச் சரியான விடை
   (1) A, B (2) B, C (3) C, D (4) A, D

34. இப்படங்கள் நினைவுபடுத்தும் இயேசுவின் அறைகூவல்கள்



   (1) நாம் வைத்திருக்கும் அனைத்தையும் இறைபணிக்கென ஒப்புவித்தலையாகும்.
   (2) சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுத்தலையாகும்.
   (3) இறைபணி செய்யும்போது வெறுங்கையுடன் செல்ல வேண்டும் என்பதையாகும்.
   (4) சுய திருப்திக்காக அன்னதானம் செய்தலையாகும்.

35. ''நாங்கள் பயனற்ற பணியாளர்கள்; எங்கள் கடமையைத்தான் செய்தோம்'' என்ற கருத்தை நினைவில் கொள்ளும் கிறிஸ்தவர் ஒருவர்

A - தன் பணியைப் பற்றி உள்ளத்தில் பூரிப்படைவார்.

B - சட்டத்தின் எதிர்பார்ப்பின்படியுள்ள அனைத்தையும் கவனத்துடன் செய்வார்.

C - தன்னுடைய பணியைக் குறித்து திருப்தியடைய மாட்டார்.

D - தமது பணியைப் பற்றி திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்ப்பார்.

இவற்றுள் மிகச் சரியான விடை

(1) A, B (2) B, C (3) C, D (4) A, D

36. வறுமைநிலை கிறிஸ்தவருக்கு முக்கிய கேள்வியாக அமைவது

A - பொருளாதார வறுமையுடன் ஆன்மீக வறுமையும் சேர்ந்து வரும் நிலையில் மட்டுமாகும்.

B - வாழ்வில் இறையரசின் விழுமியங்கள் உதாசீனமாகக் கருதப்படும் மட்டுமாகும்.

C - செல்வந்தரின் சொத்து முற்றிலும் இல்லாது போகும் நிலையிலாகும்.

D - வெளிநாட்டு உதவி கிடைக்காது போகும் நிலையில் மட்டுமாகும்.

இவற்றுள் மிகச் சரியான விடை

(1) A, B (2) B, C (3) C, D (4) A, D

37. மனிதன் இறைபடைப்பின் மீதுள்ள தன் பொறுப்பை நிராகரித்துவிட்டான் என்பதை நாம் உணர்வது

(1) தற்போது நிகழும் பல இயற்கை அனர்த்தங்கள் மூலமாகும்.

(2) சூழலையும் பல மனித உயிர்களையும் பாரிய அளவில் அழித்தொழிக்கும் போதாகும்.

(3) தொழினுட்ப வளர்ச்சியின் மூலம் செய்மதி யுகத்தினுள் பிரவேசித்தல் மூலமாகும்.

(4) பிறப்புரிமையியல் ஆராய்ச்சிகளில் கொள்ளும் கரிசனையின் நிமித்தமாகும்.

38. பல்லின, பல்சமய சமுதாயத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவன் சிறப்பாக முயற்சி செய்ய வேண்டியது

(1) சுற்றாடலின் மத்தியிலும் பிற இனத்தவர் மத்தியிலும் உணர்வுடன் செயற்படுவதாகும்.

(2) பாவத்தின் விளைவினைப் பற்றி எடுத்துக் கூறுவதாகும்.

(3) தேசிய கலாசார பண்புகளைப் பற்றி விமர்சித்தலாகும்.

(4) பிறசமய மக்களுடனான உறவுகளை மட்டுப்படுத்துவதாகும்.

39. பல தேவைகளின் மத்தியில் இருப்போரிடையே சேவை செய்தல் குறித்து புனித பவுலிடமிருந்து நாம் பெறும் வழிநடத்தல்

(1) அவர்களின் உடல்சார் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்தலாகும்.

(2) அவர்களின் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாகும்.

(3) தாம் ஒருவித முயற்சியிலும் ஈடுபடாது, கடவுளின் உதவியை எதிர்பார்த்திருக்கச் செய்தலாகும்.

(4) எவ்வாறேனும் அவர்களுக்கு நிவாரண உதவி கிடைக்குமென உறுதி கூறுவதாகும்.

40. இயேசுவுடன் தனிப்பட்ட உறவிற்குள் வரும்போது

(1) உங்கள் வாழ்விற்கான பெலத்தை மட்டுமல்ல, முழு உலகையுமே மேலும் கருத்துடையதாகச் செய்வதற்கான பெலத்தைப் பெறுவீர்கள்.

(2) உங்கள் வாழ்வு அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

(3) பிறரின் தனிப்பட்ட வாழ்வைத் துருவி ஆராய முற்படுவீர்கள்.

(4) சமுதாயப் பிரச்சினைகளிலிருந்து விலகிச் செல்வீர்கள்.

2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 3 | 21 | 3 |
| 02 | 1 | 22 | 2 |
| 03 | 2 | 23 | 3 |
| 04 | 2 | 24 | 4 |
| 05 | 3 | 25 | 2 |
| 06 | 2 | 26 | 3 |
| 07 | 2 | 27 | 3 |
| 08 | 2 | 28 | 1 |
| 09 | 4 | 29 | 3 |
| 10 | 4 | 30 | 4 |
| 11 | 4 | 31 | 3 |
| 12 | 1 | 32 | 3 |
| 13 | 2 | 33 | 4 |
| 14 | 4 | 34 | 1 |
| 15 | 3 | 35 | 3 |
| 16 | 3 | 36 | 1 |
| 17 | 2 | 37 | 2 |
| 18 | 2 | 38 | 1 |
| 19 | 3 | 39 | 2 |
| 20 | 3 | 40 | 1 |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40 புள்ளிகள்

## 2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்

★ **வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

1ம் வினாத்தாளுக்கு பரீட்சார்த்திகள் விடையளித்ததை நாம் நோக்கும்போது வினா இலக்கங்கள் 3,11,12,13,21,25,28,29,36,39,40 ஆகிய வினாக்களுக்கு 70%க்கு அதிகமானோர் மிகச் சரியான விடையை அளித்துள்ளனர். வினா இலக்கங்கள் 2,17,19,32,33,34 ஆகியவற்றுக்கு சரியான விடையை அளித்தவர்கள் 30%க்கு குறைவாகக் காணப்படுகிறது.

வினா இலக்கங்கள் 1,6,7,10,14,16,24,27,30,31,37,38 என்பவற்றில் பரீட்சார்த்திகள் 50%-70% இடையில் சரியான விடையளித்துள்ளனர். அவ்வாறே 4,5,8,9,15,18,20,22,23,26,35 ஆகிய வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் 30%-50% இடையில் சரியான விடையை அளித்துள்ளனர்.

பரீட்சார்த்திகளில் அநேகர் மிக சரியான விடையளிக்க கூடிய வினாவாக 25ம் வினா காணப்பட்டது. 94% தெளிவாகப் புரிந்துகொண்டு விடையளித்துள்ளார். இருப்பினும் இது இலகுவான வினாவல்ல என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மிகவும் குறைந்த அளவிலான பரீட்சார்த்திகள் மட்டுமே சரியான விடையளித்த வினாவாக 19ம் வினா காணப்பட்டது. ஏறக்குறைய 10% மட்டுமே விடையளித்திருந்தனர். காரணம் பரீட்சார்த்திகள் இவ்வினாவை சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாமல், சரியான விடையைத் தெரிவு செய்யத் தவறியுள்ளனர். உதாரணமாக வினா இலக்கம் 19 இயேசுவானவர் வெளிப்படுத்திய ஒரு கூற்றாகும். இது எருசலேம் நகரத்தைக் குறித்து வினாவப்பட்ட வினாவாகும். இருப்பினும் தரப்பட்ட விடைகள் நான்கில் மிகச் சரியான விடையானது பாவம் நிறைந்த நகரமாகும். என்பதை ஏறக்குறைய 90% த்தினர் புரிந்து கொள்ளவில்லை. எனவே வினாக்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்வதில் ஈடுபடவேண்டும்.

பரீட்சார்த்திகளின் விடைகளை கருத்திற்கொள்ளும் போது பாடத்திட்டத்திற்கு ஏற்ற திருவிவிலியத்தின் பகுதிகளை நன்கு அவதானித்து மனதிற்கொள்ளவும். சமுதாயம் சமயக் கருத்துக்களில் மிக அவதானமாக செயற்பட வேண்டுமென்பது தெளிவாகின்றது.

உதாரணமாக புனித லூக்கா நற்செய்தியும், திருத்தூதர் பணியில் குறிப்பிட்ட பகுதிகளையும் இறையரசு தொடர்பான படிப்பினைகளும் இயேசுவானவரின் நடைமுறை சமுதாய செயற்பாடுகளும் கிறிஸ்தவ வாழ்வுக்கு தேவையான நோக்கங்கள் போன்றவற்றை சிறப்பாக அவதானித்து பொருத்தமான பகுதிகளை மனதில் பதித்துக் கொள்ளவும் குறிப்பிட்ட பாடநூல்களை சிறப்பாக கற்றுக் கொள்வதற்கு மாணவர்களை ஊக்குவிப்பது அவசியமாகும்.

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

நேரம் :- 2 மணித்தியாலங்கள்

முதலாம் வினா கட்டாயமாகும். 10 பகுதிகள் கொண்ட இவ்வினா குறுவிடைவகை வினாவாகும். ஒரு பகுதிக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.
ஏனைய 06 அமைப்பு வகை வினாக்களில் 04 இற்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 40 ஆகும்.

2.2.2. **வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**


**வினா இலக்கம் 1**

**1.** (i) இயேசுவானவரின் பிறப்பு எளிமையான சூழலில் நடந்தது என்பதற்கான **இரு** குறிப்புகளைத் தருக.

(ii) இயேசுவானவரின் திருமுழுக்கு இறைவழிநடத்துதலின் கீழ் நிறைவேறியது என்பதற்கான **இரு** செயல்களைக் குறிப்பிடுக.

(iii) பன்னிரு முக்கிய சீடர்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க சொல் யாது ? அதன் கருத்து என்ன ?

(iv) கீழுள்ள படத்தில் காணும் மிருகத்தின் மேல் இயேசு பிரயாணம் செய்தமைக்கான நோக்கத்தை விளக்குக.



(v) திருவிவிலியத்தில் காணப்படும் இறைவன் பேரில் துன்புறுத்தலை ஏற்ற **இருவரின்** பெயர்களை எழுதுக. அவர்கள் எவ்வாறு துன்புறுத்தல்களை நோக்கினர் ?

(vi) வசனங்களை நிறைவு செய்க.

"ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ......................................"

"கன்றும் சிங்கக்குட்டியும் ......................................"

(vii) "அபிஷேகம் பெற்றவர்கள்" என பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுபவர் யார் ? புதிய ஏற்பாட்டில் "மேசியாவாக" அபிஷேகம் பெற்றவரெனக் குறிப்பிடப்படுபவர் யார் ?

(viii) "நான் ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக எருசலேமில் கட்டப்படுதற்கு மட்டுமல்ல சாவதற்கும் தயார்" என்று கூறியவர் யார் ? இவ்வசனம் நமக்குத் தரும் செய்தி என்ன ?

(ix) மன்னிப்பைப் பெற்ற வாழ்வு பற்றிய இயேசுவின் போதனை **ஒன்றைக்** குறிப்பிடுக. அவர் பாவிக்கு மன்னிப்பு வழங்கிய **இரு** நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

(x) "ஈசாய் என்னும் அடி மரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்." இக்கருத்தை இஸ்ரயேலர் முன்வைத்தவர் யார் ? இந்த உருவகத்தின் மூலம் அவர் தரும் செய்தி என்ன ?

(2 × 10 = 20 *புள்ளிகள்*)

2.2.3 **எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(1) (i)
- குழந்தை இயேசுவை காணவந்தவர் ஏழை மேய்ப்பர் ஆவார். அவர் மாட்டுக் கொட்டிலில் பிறந்தார். இயேசுவின் பெற்றோருக்கு எங்குமே தங்குமிட வசதி கிடைக்கவில்லை.
- தூய ஆவியானவர் புறாவைப்போல் ஆண்டவர்மேல் அமர்ந்தமை. நீர் என் நேசகுமாரன் எனக் கூறப்பட்டமை
- அப்போஸ்தலர் அல்லது அப்போலஸ்டாய்
- இறுதி எருசலேம் பிரயாணத்தின்போது, ஏழைகளுக்கு உதவிய கழுதை, இறையரசின் அடித்தளமான சமாதானத்தின் சின்னமாய் இருந்தமையால் அவரின் நோக்கத்தை நிறைவுசெய்தாயிற்று. (02 புள்ளிகள்)

(ii)
- தூய ஆவியானவர் புறாவைப்போல் ஆண்டவர்மேல் அமர்ந்தமை. நீர் என் நேசகுமாரன் எனக் கூறப்பட்டமை

(02 புள்ளிகள்)

(iii)
- அப்போஸ்தலர் அல்லது அப்போலஸ்டாய்

(02 புள்ளிகள்)

(iv) • இறுதி எருசலேம் பிரயாணத்தின்போது, ஏழைகளுக்கு உதவிய கழுதை, இறையரசின் அடித்தளமான சமாதானத்தின் சின்னமாய் இருந்தமையால் அவரின் நோக்கத்தை நிறைவுசெய்தாயிற்று. (02 புள்ளிகள்)

(v)

| ஆள் | துன்பம் | ஏற்றவிதம் |
|---|---|---|
| ஆபிரகாம் | சொந்தநாட்டை விடவேண்டிய நிலை | கடவுள் வழிநடத்திய தேசத்திற்குச் சென்றார் |
| மோசே | இஸ்ரயேல் மக்களால் புறக்கணிக்கப்படுதல் | எனினும் விடுதலை பெற்றுக்கொடுத்தல் |
| எரேமியா | இறைவாக்குரைத்தமை நிராகரிக்கப்படல் | பயமின்றி வழி நடத்தினார் |
| பவுல் | பிலிப்பியில் சிறையிலிடப்படல் | துதித்து செபித்தார். |

(02 புள்ளிகள்)

(vi) “ஓநாயும் ஆட்டுக் குட்டியும் கூடிவாழும் தங்கியிருக்கும்.”
“கன்றும் சிங்கக்குட்டியும் கூடிவாழும்.”

(02 புள்ளிகள்)

(vii) பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர். குருக்கள், அரசர் அபிஷேகம் பெற்றனர். (ஒருவர்)
புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

(02 புள்ளிகள்)

(viii) இவ்வாறு கூறியவர் பவுல்
ஆண்டவருக்காக சான்று பகரவும் மரிப்பதற்கும் நாம் தயங்கக் கூடாது

(02 புள்ளிகள்)

(ix) 1. பாவங்களுக்காக மனம் வருந்துவோருக்கு மன்னிப்பளித்தல் வேண்டும். நாம் மன்னிப்பை நாடுவதுபோல் பிறருக்கு மன்னிப்பளித்தல் வேண்டும். எதிரிகளுக்கும் மன்னிப்பளித்தல் வேண்டும்.
(ஏதாவது ஒன்று)

2 திமிர்வாத நோயாளியை நண்பர்கள் இயேசுவிடம் கொண்டுவந்த நிகழ்ச்சி, பாவியான பெண் கல்லெறியப்பட்டு கொலை செய்யப்பட கொண்டுவரப்பட்டவேளை, பேதுரு தன்னை மறுதலிக்கு முன்னரே மன்னிக்கப்படல்.

(02 புள்ளிகள்)

(x) எசாயா இறைவாக்கினர் (02 புள்ளிகள்)
இஸ்ரயேல் அரச பரம்பரை அழிக்கப்படமாட்டாது. மக்கள் மத்தியில் ஆமசியா பற்றிய புதிய நம்பிக்கை கொடுக்கப்பட்டது. (02 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

- இது கட்டாய வினாவாக இருந்தபோதும் இவ்வினாக்களுக்கு 2.58% பரீட்சார்த்திகள் விடையளிக்கவில்லை. (வரைபு 2இன் படி)

- முதலாம் வினாவுக்கு ஏறக்குறைய 53% பரீட்சார்த்திகள் 11-20 இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ஏறக்குறைய 47% பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கவில்லை. (அட்டவணை 3 இற்கேற்ப)

- இதில் (i) பகுதியில் 66% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்திருந்தனர்.

- இதில் (ii) பகுதியில் 75% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்திருந்தனர். 25% பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத்தவறினர். காரணம் வினாவை சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

- இதில் (iii) பகுதியில் 53% பரீட்சார்த்திகள் மட்டுமே சரியான விடையளித்திருந்தனர். 47% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கவில்லை. காரணம் இதில் விடைக்கான இரு பகுதிகள் இருந்தும் வினாவப்பட்ட சொல்லின் கருத்தையும் அதன் கிரேக்க சொல்லையும் அறிந்து எழுதவில்லை.

- இதில் (iv) பகுதியில் 34% பரீட்சார்த்திகள் மட்டுமே சரியான விடையளித்திருந்தனர். 66% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கவில்லை. இதில் நாம் அறியக்கூடியது இயேசுவானவரின் செயற்பாடுகள் நோக்கங்கள் பற்றி மாணவர்களிடையே போதிய அறிவு காணப்படவில்லை. இவைகளுக்கு கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

- இதில் (v) பகுதியில் 97% பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்துள்ள்னர். அநேகமானோர் விடையளிக்க காரணம், வினாவை வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் எல்லைப்படுத்தாமல் பொதுவாக வினாவப்பட்டமையால் அதிகமானோர் சரியான விடையளிக்க இலகுவாகக் காணப்பட்டது.

- இதில் (vi) பகுதியில் 66% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். 34% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத்தவறியுள்ளனர். இதில் திருவிவிலியத்தின் வசனங்ளை பூரணப்படுத்த தவறியுள்ளனர். பாடத்திட்டத்திற்கு சார்பான திருமறைப் பகுதிகளை அறிந்து கவனத்திற் கொள்ளாமை இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியமைக்கான காரணமாகும். எனவே முக்கியமான வசனங்களை மிகவும் அவதானித்து கற்பதில் ஈடுபடுத்தல் அவசியமாகும்.

- இதில் (vii) பகுதியின் 66% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்தள்ளனர். இருப்பினும் 34% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கவில்லை. இவ்வினா இரு பகுதியாக காணப்பட்டது. இதில் முதலாம் பகுதிக்கு விடையளித்தோர் குறைந்த சிலரே என்பது தெளிவாகின்றது. பாடநூலை சரியான முறையில் கவனத்தில் கொண்டு படிப்பது அவசியமாகும்.

- இதில் (viii) பகுதியில் 78% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். 22% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கவில்லை. பாடத்திட்டத்திற்கு அமைய திருமறை வசனங்களை சரியான முறையில் புரிந்து கொள்வது அவசியமாகும்.

- இதில் (ix) பகுதியில் 91% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்தபோதும் குறைந்த வீதத்தினர் சரியான விடையளிக்கத் தவறியுள்ளனர். இவ்வினா தொடர்பாக 10,11 பாடநூல்களில் மிகவும் வெளிப்படையாகக் காணப்படுகின்றமை அதிகமானோர் சரியான விடையை எழுதுவதற்கு காரணமாக இருந்தது என்பது விளங்குகின்றது.

- இதில் (x) பகுதியில் 81% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்திருந்தனர். 19% பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கான சரியான விடையளிக்கவில்லை. இறைவாக்கினரின் போதனைகளைப் பற்றிய கருத்துக்களை விருத்தி செய்துகொள்வது அவசியமாகும்.

**வினா இலக்கம் 2**

**2.** (i) *இறையரசின் வளர்ச்சியைப் பற்றி இயேசு கூறிய **இரண்டு** உவமைக் கதைகளின் தலைப்புகளை எழுதுக.*

(ii) *அவற்றில் **ஒன்றை** விரிவாக எழுதுக.*

(iii) *பன்மைச் சமுதாயத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவன் இறையரசின் பெறுமதிகள்/ விழுமியங்கள் வளர்ச்சியுறுவதற்கு எவ்வாறு செயற்பட வேண்டும் ?* (10 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(2) (i) கடுகு விதை /விதைப்பவரின் உவமை. முறையாக பேணப்படும் கடுகுவிதை வளர்ந்து விசாலமான செடியாகும். அதில் பறவைகள் வந்து தங்குகின்றன. சிறிய ஆரம்பத்தில் தொடங்கி இறுதியாக பெரிதாக வளர்ச்சியடைகிறது. பறவைகளைப்போல் பிற இனத்தவரும் அதில் தங்குகின்றனர்.

(03 புள்ளிகள்)

(ii) விதைப்பவனின் உவமை
வழியருகே விழுந்த விதைகள் பறவைகளால் பட்சிக்கப்படுகின்றது. கற்பாறைகளில் விழுந்தவை வளர்ந்து வேர் ஆழமின்றி உலர்ந்து போயின. முட்புதர்களில் விழுந்தவை முட்செடிகளால் நசுக்கப்பட்டன. நல்ல நிலத்தில் விழுந்தவை நூறாய்ப்பலன் கொடுத்தன.
விதை வசனம் - இதனை முறையாகப்பெற்று பலன்கொடுத்தல் இறையரசின் வளர்ச்சிக்கு உதவியாகின்றது.

(03 புள்ளிகள்)

(iii) பன்மைச் சமுதாயத்தில் இறையரசின் பெறுமதியைக் கட்டி எழுப்பச் செயல்படும் கிறிஸ்தவன் சமாதானமாகச் செயற்படவேண்டும். எவ்வித வேறுபாடுகளும் இன்றி சமமாக மதித்துச் செயற்படல் வேண்டும். அனைவரினதும் கருத்துக்களுக்கும் செவிமடுத்து ஆலோசித்துச் செயற்படுதல் நன்று. யாருக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உதவ வேண்டும். இறையரசின் விழுமியங்களை வாழ்விலும் காண்பிக்க வேண்டும். இவை போன்றவை எழுதப்படலாம்.

(05 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

89% பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்கு 49% மானோர் விடையளித்துள்ளனர். வினாவுக்கு தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10 ஆகும். இதில் புள்ளி 5 அல்லது அதற்கு குறைவாகவே காணப்பட்டது. புள்ளி 5க்கு மேலாக பெற்றவர்கள் 51% ஆகும். இவ்வினாவில் முதலாம் பகுதிக்கு 69% த்தினர் சரியான விடையளித்துள்ளதோடு இதன் இரண்டாம் பகுதிக்கு 65%த்தினரும் மூன்றாம் பகுதிக்கு 60% த்தினரும் சரியான விடையளித்துள்ளனர். இயேசுவானவரின் இறையரசு தொடர்பான போதனைகளை தனது சமுதாயத்தில் நடைமுறைக்கு கொண்டுவருவது தொடர்பாக மிகவும் ஆழமாக கற்க வேண்டும்.

**வினா இலக்கம் 3**

**3.** (i) *ஆயன் அல்லது மேய்ப்பன் என்னும் கோட்பாடு இஸ்ரயேலர் மத்தியில் வளர்வதற்குத் துணையாயிருந்த காரணிகள் யாவை ?*

(ii) *இக்கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்லும் இஸ்ரயேலின் தலைவர்களுக்கு ஏற்படும் தீமையான விளைவுகளை எசேக்கியேல் இறைவாக்கினர் எவ்வாறு முன்வைக்கிறார் ?*

(iii) *இயேசுவில் காணப்படும் சிறப்பான ஆயத்துவ மேய்ப்புப்பணியின் குணாதிசயங்களை வெளிக்காட்டும் விதத்தில் எவ்வாறு கிறிஸ்தவ தலைவர்கள் தமது திருப்பணியில் ஈடுபடலாம் என்பதை விளக்குக.*

(10 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(3) (i) இஸ்ரயேல் ஆரம்பந்தொடங்கியே மந்தை மேய்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதனால் மேய்ப்பனுக்கும் ஆடுகளுக்குமிடையே கிட்டிய உறவு இருந்தது. எனவே “இறைவன் என் மேய்ப்பன்” என்ற அணியின் கோட்பாடு வளர்ந்தது. அத்துடன் இறைவனால் நியமிக்கப்பட்ட இறைவாக்கினர், குருக்கள், அரசர் என்போர் மேய்ப்பர் என கருதப்பட்டனர்.

(02 புள்ளிகள்)

(ii) இக் கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்வோர் - மேய்ப்புப் பொறுப்புகளை சுய நலனுக்காக உபயோகிப்போர் மக்களை ஒடுக்குகின்றனர். மக்களின் தேவைகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை காயங்கள் கட்டப்படவில்லை. வழிதவறிச் சென்றவர்களைத் தேடிச் செல்லவில்லை. அவை மிருகங்களால் பட்சிக்கப்பட்டன.

(அத்துடன் மொழிபெயர்ப்பு வேறுபாடு நிமித்தம் மேலும் சேர்க்கப்படக்கூடியவை)

விலகிச் செல்லும் ஆயர்களுக்கு ஐயோ கேடு, ஆண்டவர் அவர்களுக்கு எதிராயிருக்கிறார். மந்தை மேய்ப்பிலிருந்து நீக்கப்படுவர்.

எவையேனும் மூன்றிற்கு 03 புள்ளிகள்

(iii) நல்ல மேய்ப்பனாகிய இயேசுவிலிருந்து புறப்படும் குணாதிசயங்களை கருத்திற் கொண்டு வழிதவறியவர்களைக் கண்டு பரமரிக்க வேண்டும். அவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்து திரும்பவும் மந்தையில் சேர்க்க வேண்டும். மக்களை வார்த்தையினால் தொடர்ந்து போசிக்க வேண்டும். அனைத்து தேவைகளையுமே கருத்திற் கொள்ள வேண்டும். அவர்களின் வறுமை நிலை நீங்குவதற்கு வேலைவாய்ப்புத் திட்டங்களைத் தீட்டலாம்.

துன்புறுவோர், நோய்வாய்ப்பட்டுள்ளவர், வயோதிபர், சிறுவர்கள் யாவரையும் விசாரித்து தேவைகளைச் சந்திக்க முயலலாம். (05 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

2ஆம் வினாத்தாளில் கொடுக்கப்பட்ட வினாக்களில் பரீட்சார்த்திகள் 33% மட்டுமே விடையளிக்கக் கூடிய வினாவாக அமைந்தது. இவ்வினாவைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளில் (i) பகுதிக்கு 20% சரியான விடையளித்திருந்தனர். அவ்வாறே (ii) பகுதிக்கு 13% த்தினர் மட்டுமே சரியான விடையளித்திருந்தனர். இதில் (iii) பகுதிக்கு 24% மானோர் சரியாக விடையளித்துள்ளனர்.

இவ்வினாவுக்காகத் தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10 ஆகும். விடையளித்தோரில் 63% த்தினர் புள்ளி 5உம் அதற்கு குறைவாகவும் பெற்றனர். புள்ளி 5க்கு மேலாக பெற்றவர்கள் 37% மட்டுமே. விசேடமாக இதன் (ii) பகுதியில் பழைய ஏற்பாட்டின் கோட்பாடுகளைக் குறித்து வினவப்பட்டதால் அதனைக் குறித்தான அறிவு மிகவும் குறைந்ததாகவே காணப்பட்டது.

திரு விவிலியத்தின் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் தொடர்புபடுத்தும் கோட்பாடுகளையும் கற்பிப்பது தொடர்பாக விடயங்களை கவனத்திற் கொண்டு அறிவை மேலும் விருத்தி செய்வது அவசியமாகும்.

**வினா இல 04**

**4.** ***சமுதாயத்தில் வாழும் அனைவரும் துன்பங்களையும் துக்கங்களையும் வெவ்வேறு முறைகளில் வாழ்வில் எப்போதாவது சந்திக்க நேரிடும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.***

**(i)** ***துன்பங்களுக்கான* இரு *காரணங்களைச் சுருக்கமாக விளக்கி, அவற்றினால் ஏற்படும் தீயவிளைவுகளை எடுத்துக்காட்டுக.***

**(ii)** ***பழைய ஏற்பாட்டில் துன்பங்களை எதிர்நோக்குவதற்கான மனப்பாங்குகளைக் குறிப்பிட்டு, உமது விடைக்கு ஆதரவாக (எடுத்துக்காட்டுகளை) உதாரணங்களைத் தருக.***

**(iii)** ***இயேசுவினதும் ஆரம்ப காலத் திருச்சபையினதும் முன்னுதாரணங்களைப் பின்பற்றி, துன்பங்களின் மத்தியில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென தெளிவாக விளக்குக.*** **(10 *புள்ளிகள்*)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(4)

| துன்புறுவதற்கான காரணங்கள் | தீயவிளைவுகள் |
|---|---|
| வேலையின்மை | வருமானமின்மையால் - பசிப்பிணி, மந்தபோசாக்கு |
| மது, சூது | உழைப்பு வீணாக்கப்படல் - பிள்ளைகள் குடும்பங்கள் அழிந்து போதல் |
| நோய்வாய்ப்படல் | வருமானம் இல்லாமை |
| பாவச் செயல்கள் குற்றங்கள் புரிதல் | அடிமை நிலை, குடும்பங்கள் |

இவை போன்ற 2 மட்டும் (02 புள்ளிகள்)

(ii) பழைய ஏற்பாட்டின்படி துன்புறுவதற்கான காரணங்கள் தனிநபரோ சமுதாயமோ இறைசித்தத்திற்கு எதிராகச் செயற்படுதல். சவுல் மன்னன் சாமுவேலின் சொல்லிற்கு எதிராகச் சென்று, யுத்தத்தில் தோல்வியுற்று மடிந்தான். ஆதாம் ஏவாள் கீழ்ப்படியாமையால் ஏதேனில் இருந்து விரட்டப்பட்டனர். கடின உழைப்பிற்கு ஆளாகி துன்பப்பட்டனர்.
இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாக எகிப்திலும் வேறு தேசங்களிலும் இருந்தமை, கீழ்ப்படியாமையினால் 40 வருடங்கள் வனாந்தர வாழ்க்கை, அடிமைத்தனம் போன்றவற்றைச் சந்தித்தனர்.

இவை போன்ற 3 இற்கு (03 புள்ளிகள்)

(iii) துன்பங்களின் மத்தியில் கிறிஸ்தவர் செயற்படவேண்டிய முறை. ஆரம்பகாலத் திருச்சபை போன்று, துன்பங்களை ஆசீர்வாதமாகக் கருதி எதிர்கொள்ளல், இதற்கான இறைவல்லமை பெற விசுவாசத்தில் மேலும் உறுதியாயிருத்தல் வேண்டும். பிலிப்பி சிறைச்சாலையில் பவுல் துதித்துச் செபித்தார். பிற மக்களின் துன்பங்கள் நீங்குவதற்கு நாம் முன்வருதல், அவர்களின் சுமைகளை நாமே தாங்குதல். சமுதாய அநியாயங்களை எதிர்த்து மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்வதால் அன்றாடம் ஏற்படும் சிரமங்களைத் தாங்கி முன்செல்லுதல். (05 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

இவ்வினாவை 79% பரீட்சார்த்திகள் தெரிவு செய்து விடையளித்துள்ளனர். இதில் (i)ம் பகுதியில் 87% த்தினரும் (ii)ம் பகுதியில் 76% (iii)ம் பகுதியில் 77% த்தினரும் சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கு தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10 ஆகும். இதில் 59% த்தினர் 5உம் அதற்கு குறைவாகவும் புள்ளி பெற்றவர்களாவர். புள்ளி 5க்கு மேலாக 41% மானோர் பெற்றுள்ளனர். சிறப்பான முறையில் இவ் வினாவின் எல்லா பகுதிகளுக்கும் விடையளித்திருந்தமை சிறப்பான ஒன்றாகும்.

இவ்வினாவானது சமுதாய கருத்துக்களை தொடர்புபடுத்தி விடையளிக்கப்பட வேண்டியதொன்றாகும். இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கும்போது பாடநூல்கள், திருவிவிலியம் என்பவற்றோடு பலவித விடயங்களை நடைமுறைப்படுத்தும் குழுவினராக செயற்படுத்துவதில் ஈடுபாடு கொள்வது அவசியமாகும்.

**வினா இல 05**

**5.** ***பவுல் தனது பிறப்பிலிருந்தே, கடவுள் தன்னை புறயினத்தவரின் அப்போஸ்தலனாகத் தெரிவு செய்திருந்தார் என்பதை உணர்ந்து கொண்டிருந்தார்.***

**(i)** ***இவ் உண்மையை விளக்கும் பவுலின் வாழ்வின் பின்னணியுடன் தொடர்புபட்டுள்ள நான்கு செயல்களைக் குறிப்பிடுக.***

**(ii)** ***பவுலின் ஆரம்ப கால வாழ்வின் பின்னணியம் அவரின் பிற்காலத் திருப்பணிக்கு உறுதுணையாயிற்று என்பதனை விளக்குவதற்கான எடுத்துக்காட்டுகளை உதாரணங்களுடன் முன்வைக்க.***

**(iii)** ***பவுலின் இவ்வாறான அனுபவங்கள் இன்றைய திருத்தூதுப்பணியாளர், கிறிஸ்தவத் தலைவர்கள் என்போருக்குத் தரக்கூடிய வழிநடத்துதல்கள் யாவை ?*** **(10 *புள்ளிகள்*)**

(5) (i) பவுலின் வாழ்வில் தொடர்புள்ள 4 வாய்ப்புக்கள் பலஸ்தீனாவிற்கு வெளியே தரிசு பட்டணத்தில் பிறந்து வளர்ந்தமையால் பல புறவினத்தாரைப் பற்றி அறிந்து கொண்டமை.
உரோம பிறப்புரிமை பிறஇனத்தவரின் நாகரீகங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஏற்பட்ட வாய்ப்புக்கள், கடற்பிரயாணம் பற்றி இருந்த அறிவு

இரண்டிற்கு (02 புள்ளிகள்)

(ii) பவுலின் வாலிப வாழ்க்கை பணிசெய்ய உதவிற்று

- பரிசேய குடும்பத்தில் பிறந்த அவருக்கு கமாலியேலின் கீழ் யூத சமயம் பற்றி கற்றமை, பின்னர் யூதரை எதிர்கொள்ள உதவிற்று
- கூடாரம் செய்வதற்கு அனுபவமுடையவராய் இருந்தமை திருப்பணியின்போது தன்னைப் பராமரிப்பதற்கு போதுமாயிற்று. இத்தொழிலில் ஈடுபட்டிருந்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போன்றோரின் சகவாசம் மேலும் உதவிற்று.
- உரோம குடியுரிமை பிலிப்பி போன்ற இடங்களில் அநியாயத்திற்கெதிராகச் செயற்பட உதவிற்று
- லிஸ்திராவில் இயற்கையின் மூலம் கடவுள் செயற்படுதல்
- அத்தேனில் அங்குள்ள மக்களுக்குப் போதிக்கும்போது அவர்கள் அறிந்தவற்றிலிருந்து ஆரம்பித்தமை.

(எழுதப்படும் எவையேனும் 3 காரணங்களுக்கு - 03 புள்ளிகள்)

(iii) கிறிஸ்தவ அறிவை நன்கு விருத்தி செய்துகொள்ள வேண்டும். இறையரசுக்காகத் தமது திறமைகளை முழுமையாக உபயோகித்தல். பிற இனத்தவரின் மதம், வாழ்க்கைமுறை, பாரம்பரியங்கள் பற்றிய அறிவை வளர்த்தல்.
விசுவாசத்தால் போசிக்கப்படுவதோடு, பிறரைப் போசிக்க முன்வருதல். அநியாயச் செயல்களைக் காணும்போது எதிராகச் செயற்படுதல்.

(இவை போன்ற 5 மட்டும் 05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

இவ்வினாவை 45% மான பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். இதில் (i) ஆம், (ii) ஆம் பகுதிகளுக்கு 77% த்தினரும் பகுதி (iii) இல் 85% த்தினரும் சரியான விடையளித்துள்ளனர்.

வினாவுக்கு தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10% ஆகும். இதில் புள்ளி 5உம் அதற்குக் குறைவாகவும் பெற்றவர்கள் 48% த்தினர் ஆகும். பரீட்சார்த்திகளில் சிலர் 52% த்திற்கு மேலாக பெற்றிருந்தனர். இவ்வினாவானது பிரசித்தமானதும் அதேவேளை ஒரே தலைப்பின் அடிப்படையிலும் அமைந்தது. இதற்கு ஒத்ததான வேறு வினாவும் தரப்பட்டிருந்தமையால் மாணவர்கள் வினாவை தெரிவு செய்தது குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும் இவ்வினாவைத் தெரிவு செய்தவர்கள் மிகவும் விரும்பி விடையளித்துள்ளனர்.

தெரிவு செய்வதில் முழு கவனத்தையும் பாட அறிவையும் பயன்படுத்திக் கொண்டு கூடுதலான புள்ளிகளைப் பெறக்கூடியதான வினாக்களைத் தெரிவு செய்வது அவசியமாகும். இதில் பகுதி மூன்றிற்கு சரியான விடையளித்தது சிறப்பான ஒன்றாகும்.

**வினா இல 06**

6. (i) *பவுலின் வாழ்வு முற்றிலும் மாற்றமடைந்தமையைக் குறிப்பிடும் முதல் சந்தர்ப்பம் எது ?*

(ii) *'மனமாற்றம்'* **(conversion)** *என்னும்போது கிறிஸ்தவர்கள் எதனைக் குறிப்பிடுகிறார்கள் ?*

(iii) *இயேசுவினால் வாழ்வில் ஏற்படுத்தப்படும் மாற்றத்தை வளர்ப்பதற்கென, உமது பழைய வாழ்க்கை முறையை விட்டுவிடுவதற்கு நீர் எடுக்க வேண்டிய வழிமுறைகள் என்ன ?*

(10 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(6) (i) தமஸ்கு பாதையில் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசனத்தில் கண்டு ஆண்டவரே நீர் யார்? என கேட்ட வேளையில் அவர் இயேசுவில் விசுவாசம் வைக்கிறார். (சில மாணவர் அவரின் மனந்திரும்புதலின பின்னர் வந்த முதல் சந்தர்ப்பத்தைக் குறிப்பிட்டிருப்பின், அதனையும் கருத்திற் கொள்ளலாம்.

(02 புள்ளிகள்)

(ii) மனந்திரும்புதல்

முழு வாழ்வையும் இறையரசின் ஆட்சிக்குட்படுத்தி, நிரந்தரமாக நல்வாழ்வு நோக்கி மாற்றமடைதல். இதன் அடிப்படைதான் பாவநிலையில் இருந்து மீட்கப்பட்டேன் என்ற உறுதியாகும். புதிய வாழ்வே இதற்கு உரிய சான்றாகும். மனமாறுதலின் பின் அனைவரிலும் அன்புடன் சகோதரராக ஏற்று ஒற்றுமையாக வாழ்வதற்கு கடமைப்பட்டிருக்கிறார். இம்மாற்றம் ஏதோவொரு கனப்பொழுதுக்கு மட்டும் உட்பட்டதல்ல.

(03 புள்ளிகள்)

(iii) புற சமயத்தினரை பாரபட்ச கண்ணால் நோக்காதிருத்தல், புதிய வாழ்க்கை முறையை மிக எளிய முறையில் கைக்கொள்ளல் தனக்கென அன்றி, பிறர் நலன்பெறுவதற்கு ஏற்றவிதமாய், தமது இல்லம், பாடசாலை, தொழில்நிலையம் என்ற இடங்களில் செயற்படுதல்.

தனக்கென மட்டும் வாழாமல், சமுதாயத் தேவைகளைப்பற்றி அறிந்து, சமூக அநீதிகளுக்கெதிராக பயமின்றி செயற்படுதல் வேண்டும்.

இயேசுவின் அன்பு எமக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் உரியதென உணர்ந்து அவ்வன்பை யாவருக்கும் பகிர்ந்து செயற்பட வேண்டும்.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

பரீட்சார்த்திகளில் 81% த்தினர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இதில் (i) பகுதியில் 75% மும் பகுதி (ii) இல் 81%மும் (iii) பகுதியில் 77% மும் சரியான விடையை அளித்துள்ளனர்.

இவ்வினாவுக்கு தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10 ஆகும். விடை அளித்தோரில் 47% த்தினர் 5உம் அதற்கு குறைவாகவும் புள்ளி பெற்றவர்களாவர். 5 புள்ளிகளுக்கு மேலதிகமாக பெற்றவர்கள் 53% மானோர்.

இவ்வினாவைத் தெரிவு செய்தோரில் அநேகர் சரியான விடையளித்ததைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வினாவின் மூன்று பகுதிகளுக்குச் சிறப்பாகவே விடையளித்துள்ளனர், என்பது விசேடமாகும். இது சாதாரணமான வினாவாக இலகுவான தலைப்பில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

**வினா இல 7**

**7.** (i) ***அன்பின் வாழ்விற்கு அத்தியாவசியமென இயேசு உறுதிசெய்த இரண்டு கட்டளைகள் எவை ?***

(ii) ***கொரிந்தியருக்கான பவுலின் முதலாம் நிருபத்தில் காணப்படும் அன்பின் கீதத்தில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்தவர்கள் தம் வாழ்வில் எவ்வாறான நற்பண்புகளை வளர்க்க வேண்டும் ?***

(iii) ***உமது வாழ்வில் கிறிஸ்து செயற்படுகிறார் என்றால், அதனை உமது இல்லம், பாடசாலை, பரந்த சமுதாயம் என்பவற்றில் எவ்வாறு வெளிப்படுத்துவீர் ?***

(10 *புள்ளிகள்*)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(7) (i) இரண்டு கற்பனைகள்

* உன் முழு இருதயத்தோடும், ஆன்மாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப்பலத்தோடும் உன் தேவனில் அன்பு கூர்.

(02 புள்ளிகள்)

(ii) அன்பின் கீதம் வெளிப்படுத்தும் பண்புகள்

* பொறுமை
* எப்போதும் இணக்கம் காட்டுதல்
  முற்றான விசுவாசம்
  கிறிஸ்தவ நம்பிக்கையைக் கொண்டிருத்தல்

(இவ்வாறான மூன்றிற்கு 03 புள்ளிகள்)

(iii) இயேசுவின் அன்பு வெளிப்படுத்தப்படுவதற்கு

* பிறர் தன்னிலும் மேலானவர் என்று ஏற்றல். இல்லத்தில் எந்தவொரு பணியையும் செய்தல்
* இல்லத்திற்கு வருவோரின் சமுதாய நிலைபற்றி பாராது, அவர்களைச் சமமாக உபசரித்தல்
* பாடசாலையில் மாணவர் மத்தியில் வேறுபாடுகள் ஏற்படும்போது பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையில் வழிநடத்துதல்.
* சமுதாயத்தில் காணப்படும் பிழையான பழக்க வழக்கங்களைக் கண்டித்து பிறரையும் அவற்றிலிருந்து விடுபட உதவி செய்தல் வேண்டும்.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

பரீட்சார்த்திகளில் 57% இவ்வினாவைத் தெரிவுசெய்திருந்தனர். விடையளித்தோரில் (i) ஆம் பகுதிக்கு 38%மும் (ii) ஆம் பகுதிக்கு 83% மும் (iii) ஆம் பகுதிக்கு 75% மும் சரியான விடையை அளித்திருந்தனர்.

வினாவுக்கான விடைக்கு தீர்மானிக்கப்பட்ட புள்ளி 10 ஆகும். இதில் 5 புள்ளிக்கும் அதற்கு கூடுதலாகவும் பெற்றவர்கள் 48% த்தினர் மட்டுமே. 52% த்தினர் 5 புள்ளிகளுக்குக் குறைவாக பெற்றவர்களாவர்.

இவ்வினாவின் பகுதி (i) இல் திருவிவிலியத்தில் குறிப்பிட்ட இரண்டு வாக்கியங்கள் வினாவப்பட்டன. சிலர் இதற்கு சரியான விடையை அளித்திருந்தனர். சிலர் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. காரணம் இயேசுவானவரின் இரண்டு கட்டளைகள் வினாவப்பட்டபோது மாணவர்கள் பத்து கட்டளைகளைக் குறிப்பிட்டிருந்தனர். சரியான விடை தரப்படாததால் புள்ளி வழங்கப்படவில்லை. மேலும் பகுதி (ii)ம் பகுதி (iii) ம் பகுதிக்கு சாதாரணமாக சமுதாயத்தின் அனுபவங்களையும் கருத்துக்களையும் முன்வைத்து கூடிய புள்ளிகளைப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது.

இதற்கேற்ப திருவிவிலியங்களில் சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இவ்வாறான சமுதாயத்தோடு தொடர்பான வினாக்களில் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

பகுதி **III**

## 3.0 விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டியது

### 3.1 விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய கருத்துக்கள்

**பொதுவானவை**

- ✶ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.
- ✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.
- ✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ✶ எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ✶ ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.
- ✶ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.
- ✶ வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.
- ✶ வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

- ✶ விடையளிக்கும் போது பயன்படுத்தப்பட வேண்டியது, பொது மொழிப் பெயர்ப்பான திருவிவிலியம் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.
- ✶ புனித லூக்கா நற்செய்தியையும் பாடம் தொடர்பான திருத்தூதர்பணி நூலின் பகுதிகளையும் நன்றாகக் கற்க வேண்டும்.
- ✶ "உதாரணங்களுடன் விளக்குக", இவ்வாறு குறிப்பிடும்போது முக்கிய கருத்துக்களை உட்படுத்தி சாராம்சத்தோடு எழுதி கருத்துக்களை வேறுவேறாக காட்டலாம்.

## 3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

- ✶ பாடத்திட்டம், திருவிவிலியம், பாடநூல், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி ஆகிய வளங்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைப் போன்று மாணவர்களும் அறிவைப் பெறுவது அவசியமாகும்.

- ✶ புனித லூக்கா நற்செய்தியையும் அப்போஸ்தலர் பணியையும் படிப்பதற்கு மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

- ✶ அனுதினமும் திரு விவலியத்தில் ஏற்ற பகுதிகளை திருப்பிப் பார்ப்பதனால் விடையளிப்பதற்கு இலகுவாக அமைவதோடு அதற்கான பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும்.

- ✶ இன்றைய சமுதாயத்தின் கருத்துக்களை ஆய்வு செய்யும் மாணவர்கள் அவற்றைக் கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- ✶ விடயத்தை கற்பிக்கும் போது ஆசிரியர்களின் செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வளர்ப்பதில் வழிகாட்ட வேண்டும்.